**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT COURT,**

KRISHNAGIRI

**Session Case No. 264 of 2023**

Prosecution witness LW36 (PW10) Chief

Solemnly affirmed sworn by **Tr.R.Mohan** Grade-I B.C., on date 17.03.2026 in accordance with provisions with the Act of 1873.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | திரு.வில்வராணிமுருகன் | Father Name | : | திரு.பத்மநாபன் |
| Village | : | | Taluk | : | |
| Calling | : | | Age | : | |

**Accused A2 present. A1 Personal appearance dispensed.**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் காவல் கண்காணிப்பாளராக பணிபுரிந்து பணி ஒய்வு பெற்றுள்ளேன். 02.05.1997 ம் தேதி தேன்கனிக்கோட்டை வட்ட காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வந்தேன். 03.05.1997 தேதி காலை 6.00 மணிக்கு தளி காவல் நிலைய குற்ற எண். 184/1997 பிரிவு 302 இ.த.ச வழக்கின் முதல் தகவல் அறிக்கையினை பெற்று விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன் . இந்த வழக்கில் தளி உதவி ஆய்வாளர் திரு . முனுசாமி என்பவரிடம் கிராம நிர்வாக அலுவலர் நாராயணசெட்டி கொடுத்த புகாரின்பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. அந்த புகார் **Ex.P.6** ஆகும். முதல் தகவல் **Ex.P.7** ஆகும்.

அன்றைய தினம் 7.15 மணிக்கு சம்பவயிடத்தை பார்வையிட்டு மாதிரி வரைப்படம், பார்வை மகஜிர் தயார் செய்தேன். பார்வை மகஜர் **EX.P.8** ஆகும். மாதிரி வரைப்படம் **Ex.P.9** ஆகும். பஞ்சாய்த்தார்கள் முன்னிலையில் சாட்சிகள் மாதேஸ்வரன், ஜெயராமன், நஞ்சப்பா, முனியப்பா ஆகியோர்கள் விசாரித்து சுமார் 35 வயது மதிக்க ஆண் பிரேதத்தின்மீது மதியம் 2.00 மணி வரையில்

பிரேத விசாரணை செய்தேன். பிரேத விசாரணை முடித்து பிரேதத்தை மருத்துவ பரிசோதனை அனுப்பி வைத்தேன். பிரேத விசாரணை அறிக்கை **EX.P.10** ஆகும். சம்பவ இடத்தில் இருந்து அன்றைய தினம் 2.00 மணிக்கு இரத்தம் தோய்ந்த மண், இரத்தம் கலக்காத மண் , அடையாள அட்டை வைக்க பிளாஸ்டிக் கவர் ஒன்று, இரத்தம் தோய்ந்த தோல் செருப்பு ஒன்று , 045 ரெனான்ஸ் பேனா ஒன்று ஆகியவற்றை கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் **Ex.P.11** ஆகும்.

இரத்தம் தோய்ந்த மண் **Mo.1,** இரத்தம் கலக்காத மண் **Mo.2** , அடையாள அட்டை வைக்க பிளாஸ்டிக் கவர் ஒன்று **Mo.3**, இரத்தம் தோய்ந்த தோல் செருப்பு ஒன்று **Mo.4** மற்றும் 045 ரெனான்ஸ் பேனா **Mo.5** ஆகும். 05.05.1997 தேதி சாட்சிகள் புஷ்பா , காவேரிப்பா ஆகியோர்களை விசாரித்ததில் பிரேதமானவர் தளி வெங்கடேஸ்வரா காலனி மாதப்பா மகன் கோபால் என்பவது தெரியவந்தது . மேலும் அந்த சாட்சிகள் , தலைமை காவலர் சுப்புராஜ் , காவலர் மணிவண்ணன் , ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். கைப்பற்றிய தடயங்களையும், பிரேதத்தின்மீது இருந்த சொத்துக்களையும் நீதிமன்றத்தில் கொடுத்ததை பரிசோதனைக்கு அனுப்பி வைக்க வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன் . மேற்படி வேண்டுகோள் கடிதம் **Ex.P.12** ஆகும். 17.05.1997 ம் தேதி சாட்சிகள் , திவாகரன், நாதன், கிரிஸ், இலட்சுமணன் ஆகியோர்களை விசாரித்ததில் இந்த வழக்கில் நாராயண , விஜயகுமார், தானப்பன், ஆகியோர் எதிரிகள் என்று தெரியவந்தது. மேலும் பிரேத கூராய்வு செய்த மருத்துவர் . சரோஜா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

இவ்வழக்கில் பாதுகாக்கப்பட்ட பிரேதமானவரின் மண்டையோட்டினையும் , புகைப்படத்தையும் பரிசோதனைக்கு அனுப்ப தேன்கனிக்கோட்டை நீதித்துறை நடுவருக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். அந்த வேண்டுகோள் கடிதம் **Ex.P.13** ஆகும். 16.05.1997 தேதி சாட்சி அப்துல் ரகுமன், மித்து ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 24.09.1997 தேதி இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட நாராயணப்பா , விஜயகுமார் ஆகியோர்களை பெங்களூர் White field காவல் ஆய்வாளர் , white field காவல் நிலைய குற்ற எண் . 123/1997 பிரிவு 392 இ.த.ச வழக்கில் மாலை 4.30 மணிக்கு கைது செய்ததாகவும் , மற்றும் அவருடைய வாக்குமூலங்களையும் பதிவு செய்து அனுப்பி வைத்திருந்தார் . 09.10.1997 ம் தேதி பெங்களூர் காடுக்கோடி காவல் நிலைய ஆய்வாளர் நரசிம்மய்யா , சாட்சிகள் வெங்கடரமணப்பா , கோபால் ரெட்டி , பாபு ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்த மேற்படி நரசிம்மய்யாவை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

இந்த வழக்கில் எதிரிகள் நாராயணன் ( எ நாராயணசாமி, விஜி (எ) விஜயகுமார் ஆகியோர்களை இந்த வழக்கில் காவல் படுத்த தேன்கனிக்கோட்டை நீதித்துறை நடுவரிடம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யுமாறு விண்ணப்ப கடிதம் கொடுத்தேன் . 15.10.1997 தேதி மாலை 5.00 மணிக்கு தேன்கனிக்கோட்டை ஓசூர் சாலையில் தளி ஜென்சனில் இந்த வழக்கின் எதிரி தானப்பா என்பவரை கிராம உதவியாளர் கண்ணன் , கிராம அலுவலர் ஜானகிராமன் ஆகியோர்கள் முன்னிலையில் கைது செய்து அவர்களுடைய ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். அன்றே மாலை

7.00 மணிக்கு எதிரி தானப்பன் அவர் வீட்டில் இருந்து எடுத்து ஆஜர் செய்த SAMSonite என்ற ஜிப் வைத்த பை ஒன்றும் , Pension Certificate என்ற பிளாஸ்டிக் அட்டையும், Selection Centre South Bangalore என்ற Liquor Card யயும் தளிஹள்ளி என்பவர் HAV Gopal என்ற பெயரில் எழுதியுள்ள கடிதம் ஒன்றையும் கைப்பற்றினேன் , அதில் சாட்சிகள் ஜானகிராமன் , கண்ணன் ஆகியோர் சாட்சி கையெழுத்திட்டார்கள். அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேற்படி கைப்பற்றுதல் மகஜர் **Ex.P.14** ஆகும்.

மேலும் சாட்சிகள் புஷ்பா , சின்னப்பா, முனியப்பா ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் . எதிரி தானப்பனை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன் . 26.10.1997 அன்று சாட்சிகள் ராஜா , பாஸ்கரன், நாராயணப்பா ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். White field ல் இருந்து கிடைக்கப்பட்ட ஆவணங்களை தமிழில் மொழிபெயர்த்து அந்த மொழிபெயர்க்கப்பட்ட ஆவணங்கள், 1, 2 எதிரிகள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலங்களாகும் . அல்லி (எ) அல்லிராணி என்பவரின் மாதிரி கையொப்பங்களை பெற்று ஏற்கனவே கைப்பற்றிய கடிதங்களையும் Compare செய்வதற்காக நீதிமன்றத்தில் வேண்டுகோள் கடிதம் கொடுத்து அனுப்பி வைத்தேன் . அந்த வேண்டுகோள் கடிதம் **Ex.P.15** ஆகும். சாட்சிகள் அல்லி , தங்கராஜ் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

நான் பணி மாறுதலில் சென்றுவிட்டதால் எனக்கு பின்பு வந்த ஆய்வாளர் ராஜேந்திரன் இந்த வழக்கின் இறுதி அறிக்கையினை நீதிமன்றத்திற்கு அனுப்பியுள்ளார். 02.02.1998 தேதியிட்ட உயிரியல்

அறிக்கை **Ex.P.16** ஆகும் 17.04.1998 தேதியிட்ட Anthroporlogy Report **Ex.P.17** ஆகும். 15.07.1998 தேதியிட்ட Serological Report **Ex.P.18** ஆகும். காவல் 1482 மணிவண்ணன் உதவி ஆய்வாளருக்கு கொடுத்த 03.05.1997 தேதியிட்ட தனி அறிக்கை **Ex.P.19** ஆகும். 15.06.1998 தேதியிட்ட கையெழுத்து நிபுணரின் அறிக்கை மற்றும் , அதனுடன் இணைக்கப்பட்டுள்ள Reasoning Sheet **Ex.P.20** வரிசை இந்த வழக்கில் எனக்கு பின்பு ஆய்வாளராக திரு . ராஜேந்திரன் அவர்கள் இந்த வழக்கில் புலன் விசாரணை மேற்கொண்டுள்ளார். மேற்படி குற்ற இறுதி அறிக்கையில் காணப்படும் கையெழுத்து திரு . ராஜேந்திரன் கையெழுத்தாகும் , அவருடைய கையெழுத்து எனக்கு நன்கு பரிச்சீயமாகும்.

கைப்பற்றப்பட்ட தடயங்கள் நீதிமன்றத்திற்கு படிவம் 91 மூலம் அனுப்பப்பட்டது. அந்த படிவம் 91 ஐந்து எண்ணிக்கை உள்ளது **Ex.P.21** வரிசையாகும். கருப்பு நிற Samsonite ஜிப் வைத்த ரெக்சின் 5 **Mo.6** ஆகும். Pension Certificate , Pension payment Order, கோபால் மற்றும் அவர் மனைவியுடன் எடுத்துக்கொண்ட புகைப்படம் **Mo.7** , ஆகும். Liquor Card **Mo.8** . Inland Letter Card **Mo.9** ஆகும். சிவப்பு நிற தோல் பெல்ட் **Mo.10** ஆகும். வெளிர் நீல அரைக்கை சில்க் சட்டை **Mo.11** ஆகும். கருநீல கலர் பேன்ட் **Mo.12** ஆகும். வெள்ளை நிற முண்டா பனியன் **Mo.13** ஆகும். பிஸ்கட் கலர் ஜெட்டி **Mo.14** ஆகும். தங்கை ஜெயின் 12 கிராம் எடையுள்ளது **Mo.15** ஆகும். தங்க மோதிரம் 7 கிராம் உள்ளது **Mo.16** ஆகும். வெள்ளை அரைநாண் கயிறு ஒன்று **Mo.17** ஆகும். டைட்டன் வாட்ச் ஒன்று **Mo.18** ஆகும். சாவி கொத்து **Mo.19** வரிசையாகும். Button கத்தி ஒன்று **Mo.20** ஆகும். கல்லொன்று **Mo.21** ஆகும்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :**

சம்பவயிடத்திற்கு சம்பவ நடந்ததாக சொல்லும் சமயத்தில் இருந்து 16 மணி நேரம் கழித்து தான் போனேன் என்று சொன்னால் சரிதான் . சம்பவ தகவல் கிடைத்த பிறகுதான் போனேன். மணிவண்ணன் என்ற தலைமை காவலரை நான் விசாரித்தாக சொல்லியுள்ளேன் அவர் தன்னுடைய தனி அறிக்கையில் கத்தி ஒன்றை கைப்பற்றியதாக சொல்லியுள்ளார் என்றும் அது என்ன அளவு , நீளம் , அகலம் , அது எந்த வகையான கத்தி என்ற விவரத்தை சொல்லவில்லை என்றால் சரிதான் . அதேபோல் ஒரு கல்லொன்றை எடுத்ததாக சொல்லியுள்ளார் என்றும், அந்த கல் எவ்வளவு எடை உள்ளது, என்ன வகையான கல் என்ற விவரத்தை அவரை நான் விசாரித்தபோது அந்த விவரங்களை அவர் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் சம்பவயிடத்திற்கே போகவில்லை என்றும் , சம்பவயிடத்தில் வைத்து எந்த வரைப்படத்தையும் தயார் செய்யவில்லை என்று சொன்னால் தவறு. அந்த இடத்தில் வைத்து எந்த மகஜரையும் தயார் செய்யவில்லை என்றால் அது தவறு. சம்பவயிடத்தில் வைத்து எந்த பொருளும் கைப்பற்றவில்லை என்றால் அது தவறு . நான் சொல்லியுள்ள பஞ்சாய்தார்கள் அனைவரும் தெலுங்கு மற்றும் கன்னட மொழியில் கையெழுத்து போட்டுள்ளார்கள் என்றும் அவர்களுக்கு தமிழ் படிக்க தெரியாது என்று சொன்னால் அது தவறு . 3 பேர் ஆங்கிலத்திலும், 2 பேர் கன்னடத்திலும் கையெழுத்து போட்டுள்ளார்கள்.

அவர்கள் அனைவரும் தமிழ் தெரியும் . அவர்களுக்கு தமிழ் தெரிந்திருந்தால் தமிழிலே அவர்கள் கையெழுத்து போட்டு இருப்பார்கள்

என்றும், உயர் அதிகாரிகள் நாங்கள் கேட்டுக்கொண்டதால் எங்களுக்கு பயந்து அவர்கள் கையெழுத்து போட்டார்கள் என்று சொன்னால் அது தவறு. நான் இந்த வழக்கின் புகார்தாரர் கிராம நிர்வாக அலுவலரை அழைத்து இப்படி தான் புகார் எழுதி தரவேண்டும் என்று நான் சொன்னதன் அடிப்படையில் எனக்கு பயந்துக்கொண்டு நான் சொன்னவாறு அந்த புகரை எழுதிக்கொடுத்தார் என்று சொன்னால் அது தவறு . சாட்சி புஷ்பா இறந்து போன நபரின் மனைவியை எப்பொழுது விசாரித்தேன் என்று சொன்னால் 05.05.1997 தேதி விசாரித்தேன். மேற்படி புஷ்பா நான் விசாரித்தபோது தன்னுடைய கணவர் எப்படி இறந்தார் என்ற விவரம் தனக்கு தெரியாது என்று சொல்லியுள்ளார் என்றால் அது தவறு .

அதேபோல் அசா.3 காவேரிப்பா என்பவரை 05.05.1997 தேதி விசாரித்தேன். தன்னுடைய மருமகன் எப்படி இறந்தார் என்ற விவரம் தெரியாது என்றும், போட்டோ பார்த்து தான் அவர் இறந்தவிவரத்தை தெரிந்துக்கொண்டேன் என்று வாக்குமூலம் கொடுத்துள்ளார் என்று சொன்னால் அவ்வாறு வாக்குமூலம் ஏதும் கொடுக்கவில்லை . ஆனால் போட்டோவை பார்த்து அடையாளம் காட்டியதாக சொல்லும் விவரங்கள் உண்மைதான். அதேபோல் சாட்சி கிரிஸ் தான் எந்த ஆவணத்திலும் கையெழுத்திடவில்லை என்று சொன்னால் அது தவறு.

மேற்படி கிரிஸ் இந்த வழக்கு பற்றி தனக்கு தெரியாது என்று சொன்ன பிறகும் நான் வற்புறுத்தி கையெழுத்து வாங்கினேன் என்று சொன்னால் அது தவறு . முதல் எதிரி நாராயணப்பாவிற்றும் 2-வது எதிரி விஜயகுமாருக்கும் தமிழ் எழுதப்படிக்க தெரியாது என்றும், அந்த ஒப்புதல்

வாக்குமூலங்கள் எங்களால் ஜோடிக்கப்பட்ட ஒன்று என்று சொன்னால் அது தவறு. சம்பவ இடமானது தளி செல்லும் ரோட்டில் மலையடிவாரத்தில் உள்ள இடம் என்று சொன்னால் சரியல்ல . இந்த வழக்கில் இறந்து போன கோபால் கனரக வாகனத்தினால் இழுத்து செல்லப்பட்டு அதனால் இறப்பு ஏற்பட்டிருக்கிறது என்றும் , அவர் கொலைசெய்யப்படவில்லை என்று சொன்னால் அது தவறு . படிவம் –91ல் அனுப்பப்பட்ட சான்று பொருட்கள் பின்னிட்டு எங்களால் ஜோடிக்கப்பட்டு நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட பொருட்கள் என்று சொன்னால் அது தவறு . சம்பவ இடத்தில் நான் எந்த பொருளையும் கைப்பற்றவில்லை என்றும், எதிரிகள் மீது தவறுதலாக இந்த வழக்கில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் அது தவறு . நான் விசாரித்த சாட்சிகள் எனக்கு பயந்து உண்மை விவரம் ஏதும் சொல்லவில்லை என்று சொன்னால் அது தவறு.

VASUDEVAN DAMODARAN

Digitally signed by VASUDEVAN DAMODARAN
Date: 2026.03.06 19:38:31 +0530